**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 38** **நாள் : 14.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக, தெருவோரம் வசிக்கும் வீடற்ற 43 நபர்கள் மீட்கப்பட்டு, காப்பகங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களின் மறுவாழ்விற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சென்னை மாநகரத்தில் நகர்புற வீடற்றோர்க்கான காப்பகங்கள் 2013 முதல் செயல்பட்டு வருகின்றன. இதுவரை சென்னையில் 38 நகர்ப்புற வீட்டற்றோருக்கான காப்பகங்களும், 13 மருத்துவமனைகளில் சிறப்பு காப்பகங்கள் என மொத்தம் 51 காப்பகங்கள் தற்போது செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, பொதுச்சுகாதாரத்துறை சார்பாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ், தெருவோரம் வசிக்கும் வீடற்ற ஆண்கள், பெண்கள், முதியோர்கள், திருநங்கைகள் ஆகியோரை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான உணவு, மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்ற அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டு காப்பகங்களில் தங்கவைக்கப்படுகின்றனர். தெருவோரம் கண்டறியப்படும் சிறார்களுக்கும் தேவையான உணவு, மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டு, தங்குமிடம் அளித்து அங்கிருந்து பள்ளி சென்றுவர ஏற்பாடும் செய்யப்படுகிறது. அறிவு திறன் குறையுள்ள சிறார்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்றவைகள் வழங்கப்பட்டு, அவர்களின் மறுவாழ்விற்கு காலவரையறை நிர்ணயமும் செய்யப்படுகிறது.

மேலும், காப்பகங்களில் தங்க வைக்கப்படும் நபர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல் (வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, முதியோர் ஓய்வூதியம்), திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து மறுவாழ்வு அளித்தல், பிரிந்தவர்களை குடும்பத்தினரோடு சேர்த்து வைத்து அவர்களின் மறுவாழ்விற்கு வழிவகையும் செய்யப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது 1,671 தெருவோரம் வசிக்கும் வீடற்ற ஆண்கள், பெண்கள், முதியோர்கள், திருநங்கைகள் ஆகியோர் மீட்கப்பட்டு காப்பகங்களில் தங்கவைக்கப்பட்டு, அவர்களின் மறுவாழ்விற்கு வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், காவல்துறை உதவியுடன் 13.02.2019 அன்று இரவு நடைபெற்ற வீடற்றோர் மீட்பு பணியில் கிண்டியில் 15 நபர்கள், வடபழனியில் 21 நபர்கள், திருவொற்றியூரில் 7 நபர்கள் என மொத்தம் 43 வீடற்ற தனிநபர்கள் கண்டறியப்பட்டு காப்பகத்தில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் இடங்களின் அருகிலோ அல்லது வேறு ஏதேனும் பகுதிகளில் சாலையோரங்களில் வசிக்கும் தனிநபர், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இதரபிற வீடற்றோர் வசிப்பதை அறிந்தால் பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913, 94451 90472, 044–2530 3849 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். தகவல் கிடைத்தவுடன் காப்பகப் பொறுப்பாளர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று சாலையோரம் வசிப்பவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கி, காப்பகத்தில் தங்கவைத்து அவர்களின் மறுவாழ்வு மற்றும் வாழ்வுரிமை பாதுகாக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சியால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**